KB14-1-2-TA

# இயேசுவே மேசியா என்பதை உறுதிபடுத்திடும் 16 தீர்க்கதரிசனங்கள் - பாகம் 1 - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சியில்.: இந்த ப{மிக்கு விசெசூpத்த நபரான மெசியாவை அனுப்ப பொவதாக தெவன் ஏற்கனவெ தமது தீர்க்கதரிசிகள் ஷலம் பல வருட';களுக்கு முன்பாகவெ டிசால்லியிருக்கிறாரா, குறிப்பாக என்ன தீர்க்கதரிசன';களை டிகாடுத்திருக்கிறார், எபிரெய வெதத்தில் எந்த பகுதிகளில் அந்த வார்த்தைகள் இருக்கிறது, அந்த தீர்க்கதரிசன';கள் உரைக்கப்பட்ட ய{த கூன';கள் வரப்பொகிற மெசியாவைக் குறித்து டிசால்லப்பட்ட குறிப்பான வார்த்தைகளை பஜரிந்துடிகாண்டார்களா, இந்த டிசய்திடிதாடரில் நாம் சுமார் 16 தீர்க்கதரிசன வார்த்தைகளை பார்த்திடலாம் ஆதாம் முதல் ஆபிரகாம் வரை.: மொசெ முதல் தாவீது வரை.: ஏசாயா முதல் தானியெல் சகரியா வரை. நாம் கெட்கலாம்.: இந்த மறுக்க முழயாத தீர்க்கதரிசன';கள் இயெசு தான் மெசியா என்பதை நிருபித்துள்ளதா,

எனது முதல் விருந்தினர் டாக்டர். வால்டர் டிபய்சர். அவர் இப்பொதுள்ள இறையியல் மெதைகளில் ஒருவர் மற்றும் இன்றைக்கு அடிமரிக்காவில் எபிரெய பத வசன';களின் வெத வல்லுநர். டுhக்டர் டிகய்சர் முதன்மை தலைவரும் பிரசித்தடிபற்ற

பர்ய ஏற்ப்பாட்டு விரிவஜரையாளராகவஜம் கார்டன் - கான்டிவல் இறையியல் டிசமினரி ஞாமில்டனில் இருக்கிறார்.். மா!;காவ்டிசட்!;. இரண்டாவதாக.். டாக்டர் டெரல் பாக். அவரும் நிகர்;கால இறையியல் வல்லுநர்களில் ஒருவர் பஜதிய ஏற்ப்பாட்டு வல்லுநராக இருக்கிறார். அவர் பஜதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் முதன்மை ஆராய்ச்சி விரிவஜரையாளராக இருக்கிறார் பாரம்பரிய கலாச்சார அமைப்பின் ஒரு';கிணைப்பாளராக டாலா!; இறையியல் டிசமினரியில் இருக்கிறார் டாலா!;.். டிடக்சா!;. இந்த விசெசூpத்த நிகர்;ச்சியில் இணைந்திடு';கள் கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகர்;ச்சிக்கு உ';களை வரவெற்கிறொம். 2 சிறப்பான விருந்தினர்கள் இருக்கிறார்கள்.். டாக்டர்வால்டர் டிகய்சர் மற்றும் டாக்டர் டெரல் பாக் அவர்களுடைய அறுமுகத்தை குறித்து கெட்டொம் இன்றைக்கு பிரமாண்டமான தலைப்பை பற்றி பெச இருக்கிறொம்.். மிகஜவம் முக்கியமான தலைப்பஜ. உ';களுக்கு டிதரியஜமா… உ';கள் முன் இந்த கெள;வியை வைக்கிறென் - வரலாற்றில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பஜ குறிப்பிட்ட முன்னரிவிப்பஜகள்.். தீர்க்கதரிசன';கள்.். வாக்குத்தத்த';களை.். தெவன் டிகாடுத்ததற்கு ஆதாரம் இருக்கிறதா.். ஆயிரக்கணக்கான வருடத்திற்கு முன்பாகவெ.். எதிர்காலத்தில் ஒரு நபர் வருவார் அவர்தான் மெசியா என்று வுறப்பட்டதா.். இந்த தகவல்கள் வர்';கப்டிபாற்ற ய{தர்கள்.். த';களுக்கு டிகாடுக்கப்பட்ழருக்கிற பிரத்தியெக தகவல்களை ஏற்றனரா.்.

விசெதூ வாக்குத்தத்த';கள்.: எதிர்காலத்தில் மீட்பர் ஒருவர் வருவார் என்பதை அ';கிகரித்தனரா, இந்த வாக்குத்தத்த';கள் அனைத்தும் இயெசுவை குறிக்கிறதா அல்லது தெவன் தமது சார்பில் வெடிறாருவரை அனுப்பஜவார்.: என்பதாய் வெதத்தில் டிசால்லப்பட்ழருக்கிறதா, அதாவது.: இதைதான் அவர் டிசால்கிறார்.: என்னடிவன்றால்.: “என்னொடு உனக்கு வர்க்குண்டானால்.: அதை எனக்கு டிதரியப்படுத்து.” மெலும் அவர்.: “நானெ கர்த்தர்.: வெடிறாருவரும் இல்லை. நான் டிசால்லிய வார்த்தைகள் நிறைவெறும் என்கிறார்.” அதைதான் இன்றைக்கு நாம் பார்க்க இருக்கிறொம்.: அது நிறைவெறிற்றா, நிறைவெற்றப்பட்டதா, சரி.: டெரல்.: பஜதிய தலைப்பஜகளை இன்றைக்கு பார்க்க இருக்கிறொம்.: அதை சுருக்கமாக டிசால்கிறென். கடந்த வார நிகர்;ச்சியை பார்க்காதவர்களுக்காக டிசால்கிறென்.: ஓகெ.: கடந்த வாரம் நிகர்;ச்சியை பார்க்காதவர்கள் கவனியஜ';கள்.: நாம் பார்த்த முதல் ஷன்று தீர்க்கதரிசன';கள் என்ன,

**டாக்டர். டேரல் பாக:** வெல், நாம் ஆதியாகமம் 3ல் இருந்த ஆரம்பித்தோம் விதையை வைத்து பேசினோம், ஸ்தீரியின் வித்தாக தோன்றுபவர் அந்த சாத்தானுக்கு இணையாக சொல்லப்பட்ட சர்ப்பத்தை முறியடிப்பார். அதன் பிறகு நாம் ஆதியாகமம் 9ல் சேமின் வீட்டாருக்கு  சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை பார்த்தோம், சேம் வம்சத்திலிருந்து, அந்த நபர் தோன்றுவார். அதன் பிறகு நாம் மிகவும் முக்கியமான வாக்குத்தத்தங்களை இப்போது பார்க்க இருக்கிறோம், ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் உன்

சந்ததியில் இருந்து ஒருவர் எழும்பி பூமியனைத்திற்கும் ஆசீர்வாதமாக இருப்பார். என்ன நடக்குதென்றால் தேவன் மனுக்குலத்தின் பெரிய கூட்டத்திலிருந்து ஒரு சந்ததியை வேறுபிரித்து இதிலிருந்து தோன்றுவார் என்று நமக்கு தெளிவாக காட்டுகிறார்.

**ஆன்கர்பெர்க்:** யா, நாம் பேசிக்கொண்டிருக்கும் காரியம் ஒரு விதத்தில் வியப்பாக இருந்திடும். அதாவது, இதைப் பார்க்கும் போது என்ககு நெகிழ்ச்சியாக இருக்கிறது. தேவன் வரலாற்றில் இடம்பெற்றுள்ளார், அவர் கொடுக்கும் அனைத்து தகவல்களிலும் அந்த நாட்களில் வாழ்ந்தவர்களுக்குள்ளும் எதிர்கால சந்ததிகளுக்குள்ளும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார். சரி, வால்டர், கடந்த வாரம் ஆபிரகாமோடு நிறுத்தினோம். அவருக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் வித்து இந்த உலகை மீட்க வந்த இயேசு கிறிஸ்து என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். அவர்தான் ஸ்திரீயின் வித்தாக சாத்தானின் தலையை நசுக்க வந்த ஆணாக இருக்கிறார். ஆனா நான் என்ன கேட்கிறேன் என்றால், மற்ற காரியங்களைப் பற்றியும தேவன் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார், அதை நான் வாசிக்கிறேன். அவர் ஆபிராமை நோக்கி, - இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல்,” - அதுதான் அவருடைய பெயராயிருந்தது - “இனி நீ ஆபிரகாம் என்றழைக்கப்படுவாய், நான் உன்னை ஜாதிகளுக்கு தகப்பனாக ஏற்ப்படுத்தினேன் என்றார்.” சரி, இதை பாருங்க. “நான் உன்னை பழுகிபெருகப்பண்ணி உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்கிறார்,”

அதன் பிறகு திடீரென்று தேவன் இந்த புதிய காரியத்தை சொல்கிறார், உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்." அதன் அர்த்தம் என்ன?

டாக்டர். வால்டர் கெய்சர்: சரி, இதுவும் மேசியாவைக் குறிக்கும் விஷயம். ஆதியாகமம் 3ல் அவர் மனுக்குலத்தில் தோன்றுவது சொல்லப்பட்டுள்ளது, முதலாவது வாக்குத்தத்தம். இங்கு அவர் வானத்திலிருந்து இறங்கி வந்து மனிதர்களின் மத்தியில் வாசம்பண்ணுவார், அவருடைய தெய்வீக தோற்றம். அப்போது அவர் மனிதர்களை ஏற்படுத்தி இந்த பூமியிலுள்ளவர்களை நடத்தும்படி செய்வார் அதினால் அவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது, இந்த மேசியா ராஜாவாகவும் அரசாளுகிறவராகவும் இருப்பார், முழு உலகத்தையும் அவர் ஆண்டுகொள்வார், அண்டசராசரத்தையும் அவர் ஆளுகை செய்வார். ஆதினால் வாக்குத்தத்தங்கள் நிறைவேறிடும். இந்த மேசியா ராஜா வருவார் என்பதற்கு யாக்கோபின் மூலமாகவும் நமக்கு ஆதாரங்கள் இருக்கிறது. ஆவர் தான் மேசியாவாக இருப்பார் அவரே நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

**ஆன்கர்பெர்க்:** சரி, சந்ததி என்று சொல்லும்போது, தாம் குறித்தபடி அந்த விசேஷமானவர் வரும்படி அந்த சந்ததியை தேவன் குறுக்கிவிட்டார். அவர் எப்படி அதை குறுக்கிவிட்டார் என்பதை மறுபடியும் வாசித்து பாருங்கள்.

**கெய்சர்:** சரி, அவர் அதை குறுக்கிவிட்டார் சரி, இந்த ஆபிரகாமை பொருத்தவரை, ஈசாக்கு வந்தார், அவரிலிருந்து அவர் மகன் யாக்கோபு. இதுவே நமக்கு ஆதிபிதாக்களின் வருஷத்தில் 250 வருஷத்தை கொடுத்திடும், முற்பிதாக்களின் காலம் என்கிறோம். இங்குதான் நமக்கு மேசியாவின் சரிதை தோன்றப் பெறுகிறோம் அவரே நம் ராஜாதி ராஜாவா, கர்த்தாதி காத்தாவாக தேவாதி தேவனாக இருப்பவர்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. இப்ப தேவன் ஈசாக்கையும் யாக்கோபையும் ஆசீர்வதித்து உங்கள் சந்ததியிருந்து அந்த வித்து தோன்றும் என்று வாக்குதத்ததம் கொடுக்கிறார். தேவன் அந்த வாக்குத்தத்தத்தில் உறுதியாக இருக்கிறார், அவர் அதை ஆபிரகாமிலிருந்து ஈசாக்கிற்கு பிறகு யாக்கோபிற்கும் சொல்கிறார். அதில் யாக்கோபு, இந்த ராஜாக்களைக் குறித்து அவரும் சொல்லுகிறார். அதாவது, “உன்னிலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்.” இங்கு நமக்கு ஒருவிதமான தடையம் கிடைக்கிறது, “ராஜாக்கள்” இதைத்தவிற நமக்கு வேறொன்றும் டிதரியாது, டேரல். இதைக் குறித்து இன்னும் எப்படி பேச முடியும்?

**பாக:** சரி, இங்க உபயோகிக்கப்பட்டிருக்கிற வார்த்தை மிகவும் முக்கியமானது தான் “ராஜாக்கள்”. நாம் பேசுகிறதும் ராஜா என்று தனித்து சொல்லப்பட்டிருக்கும் வார்த்தை அல்ல. நாம் பேசிக்கொண்nருப்பது ஒரு சந்ததி, ஒரு வம்சம். தேவன் கிரியை செய்திடும் ஒரு குறிப்பிட்ட அரசர்கள் இருப்பார்கள் என்பது உறுதி.

உண்மையில் ஒரு குறிப்பிட்ட அரசர் மட்டும் தான் நீங்கள் எதிர்ப்பார்க்கும்படியான நன்மைகளை கொடுப்பவராக இருப்பார் என நினைக்கிறேன. எனவே இந்த காரியத்தை ஆராயும் போது இதையும் நாம் கவனிக்கவேண்டும், இப்படி குறிப்பிட்ட சந்ததி குறுக்கப்படுவதால், நாம் பார்க்க இருக்கும் மற்ற நபர்களை விட இவர் மிகவும் தனித்துவம் பெற்றவராக தனித்து நிற்பதை நம்மால் பார்க்க முடியும். ஆதனால் தான் வேதத்தின் சம்பங்கள் அனைத்தும் வியப்பாக இருக்கிறது. ஏன்னா ஒரு கட்டத்தில் நாம் பலதரப்பட்ட ராஜாக்கள் எபும்புவதை பார்ப்போம் ஆனால் ஒருவரும் இந்த வார்த்தைக்கு பொருந்தியில்லை, இந்த குறிப்பிட்ட நபரின் தன்மைகள் அங்கு இல்லை. தேவன் வாக்குரைத்தபடி அனைத்து தன்மையுடையவர் ஒருவருமில்லை. அதனால் நாம் தொடர்ந்து தேடுகிறோம், உண்மையுள்ள தேவன் தமது உண்மையான வார்த்தைகளை நிறைவேற்றும்படியாக எதிர்பார்க்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** சரி, நாம் ஐந்தாவது வாக்குத்தத்தத்தை பார்க்கலாம், யாக்கோபு ஒரு ராஜாவைக் குறித்து முன்னறிவிக்கிறார். அந்த வசனம் ஆதியாகமம் 49ல் இருக்கிறது. "யாக்கோபு தன் பன்னிரண்டு குமாரரையும் கூடிவரும்படியாக அழைக்கிறான், "நீங்கள் கூடிவாருங்கள் கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரிங்களை நான் அறிவிப்பேன்." அதிலிருந்து 10வது வசனத்தை வாசிக்கிறேன். "செங்கோல்" யூதாவைவிட்டு, "நீங்குவதும் இல்லை." அவருடைய குமாரரில் ஒருவனின் பெயரை சொல்கிறார், "யூதாவின், பாதத்தைவிட்டு நியாயப்பிரமாணிகன் ஒழிவதும் இல்லை. சமாதான

கர்த்தர் வருமளவும் அது மறையாது, ஜனங்கள் ஓரிடத்தில் சேர்ந்து அவருக்கு கீழ்ப்படிவார்கள்"  சரி, டாக்டர். கேய்சர், இதை நீங்கள் விளக்கி சொல்லனும், ஏன்னா சில மொழிபெயர்ப்புகளில், நியு அமெரிக்கன் ஸ்டென்டர்ட் பைபிள் போல, அதில் ஷைலோ வரும்வரை என்றிருக்கு." யார் இந்த  ஷைலோ, ஏன் இது வேறு விதத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

**கெய்சர்:** இது முக்கியமான வாக்குத்தத்தம், ஏன்னா யாக்கோபு தேவனுடைய வெளிப்பாட்டை பெற்று ராஜாக்கள் தோன்றுவார்கள் என்று முன்னறிவிக்கிறார், மேலும் அது ரூபன் கோத்திரத்திலிருந்து இல்லை, லேவியோ, சிமியோனோ இல்லை - சரியா, முதல் மகனாகவே இரண்டு, மூன்றிலோ இல்லை - அது அவனது நான்காவது மகன், யூதா. யூதா தெரிந்துகொள்ளப்பட்டான் அவனுக்கு ராஜரீகத்தின் அடையாளம் கொடுக்கப்பட்டது. அவனுக்கு செங்கோலும் நியாயப்பிரமாணிகன் என்ற நிலையும் கொடுக்கப்பட்டது. அவர் சொல்கிறார், "ஷைலோ வரும்வரை அது உன்னை விட்டு நீங்குவதில்லை." சரி, யார் இந்த ஷைலோ? இங்கு இது பிரிந்திருக்கும் வார்த்தை, சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த "ஷை" அல்லது "ஷி" என்பது பெயரெச்ச சொல்லாக இருக்கிறது, அவருக்குரிய என்பது இரண்டாம் பகுதியான "ல்" க்கும்? "ஓ" என்பது "அவரை" குறிக்கிறது. ஆகவே இது இங்குமட்டும் அப்படி மொழிபெயர்க்கப்படவில்லை, எசேக்கியல் புத்தகத்திலும் அப்படிதான் இருக்கிறது, "செங்கோல் அவருக்கு உரியதாயிருக்கிறது."

வேறுவார்த்தையில் சொன்னால், அது யூதா கோத்திரத்தின் உரிமையாக இருக்கிறது. எனவே இந்த ராஜாவை நான் கண்டறியவேண்டும், வரப்போகிற இந்த ராஜா, யூதாவின் சந்ததியின் வழியாக வருவார், நான்காவது மகன், முதல் மகனோ, இரண்டாவது மகனோ, மூன்றாவதோ அல்ல.

**ஆன்கர்பெர்க்:** எதனால் இது முக்கியம், டேரல்?

**பாக:** வெல், சரி, நாம் பார்த்துக்கொண்டிருக்கும் காரியத்தை நாம் குறுக்கி கொண்டே வருகின்றோம். எல்லா மனிதர்கள் என்பதிலிருந்து சேம் வம்சம், அதில் ஆபரகாமின் சந்ததி. இப்ப அவருடைய பிள்ளைகளுக்குள் பார்க்கிறோம், அவர்களை பார்க்கும் போது, அவர்களில் -- அவங்க தான் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் -- இந்த பன்னிரண்டு பேர்களில் ஒருவர் தான் அது. இந்த குறிப்பிட்ட நபர் யூதா கோத்திரத்திலிருந்து வருவதை நாம் காண முடியும்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப ஒரு இடைவேளை எடுத்துக்கலாம். நாம் திரும்ப வரும்போது தேவன் யூத ஜனங்களுக்கு அறிமுகப்படுத்திய சில காரியங்களைக் குறித்து நாம் பார்க்க போகிறோம் அவை எப்படி இதனோடு இணைகின்றது என பார்ப்போம். இந்த எல்லா புள்ளிகளையும் இணைத்து எங்கிருந்து வருகிறது என்ன நடக்கும் என்பதை பார்க்க இருக்கிறோம். தேவன் அதோடு சில தகவல்கᵢயும் சேர்த்திடுவார், இந்த புதிருக்கு இன்னும்

சில தகவல்கள். நாம் திரும்ப வரும்போது இதைப்பற்றி பேசிடலாம். இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வரவேற்கிறோம். இன்றைக்கு நாம் டாக்டர் வால்டர் கெய்சரோடு பேசிக்கொண்டிருக்கிறோம், அவரோடு கூட டாக்டர் டேரல் பாக்கும் நம்முடன் இருக்கிறார். இப்போது நாம் வேதத்தில் தேவன் மேசியாவைக் குறித்து கூறியுள்ள தீர்க்கதரிசனங்களை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். அதாவது, அது உண்மையா? இது உண்மையில் நடந்ததா? இந்த ஜனங்களுக்கு தேவன் உண்மையாகவே இந்த காரியங்களை பேசினாரா? இந்த காரியங்கள் அனைத்தும் பல ஆயிரகணக்கான வருடங்களுக்கு முன்பாக பதிக்கப்பட்டிருக்க இன்றைக்கு நாம் அதை வாசித்து ஆராய்ந்து பார்க்க முடியுமா? முடியும் என்பதுதான் விடை. அதைதான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எங்களோடு இணைந்து பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்காக சொல்கிறேன், முதலாவது நாம் பேசிய வார்த்தை ஆதியாகமம் 3: 15 - ஸ்திரீயின் வித்தானவர் ஒருவர் தோன்றி சாத்தானின் தலையை நசுக்குவார். யார்வேண்டுமானாலும் இருக்கலாம் என தோன்றலாம்.

சேமுடைய கூடாரங்களிலிருந்து தொடங்கி, தேவன் அதை குறுக்குகிறார், சேமுடைய வம்சத்திலிருந்து ஆரம்பித்து, கிரேக்கர்களின் முறைபடி சொன்னால், சேம் சந்ததி. ஆபிரகாமின் வித்திலிருந்து, இந்த ஒரு மனிதனுடைய சந்ததியிலிருந்து, தேவன்

சொல்கிறார், இந்த பூமியை ஆசீர்வதிக்கும் ஒருவர் தோன்றிடுவார் என்பதாக சொல்கிறார். ஈசாக்கிலிருந்து, இஸ்மவேல் அல்ல, யாக்கோபிலிருந்து, ஏசா அல்ல. இப்ப ஈசாக்கின் பாதி சந்ததி அந்த வம்சத்திலிருந்து விலகிவிட்டது. இப்ப ராஜாக்களை பற்றி சொல்லும் போது ஒரு வேத பகுதியை உங்களுக்கு நான் இப்போது எடுத்துக் கூற விரும்புகிறேன். அவன் ஒரு அந்நியன், இங்கு அவனுடைய பெயர், பிலேயாம் என்று சொல்லப்படுகிறது. இஸ்ரவேலின் வருங்கால ராஜாவைப் பற்றி பிலேயாம் தீர்க்கதரிசனம் சொல்கிறார். எண்ணாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் 24: 17. இங்கே பிலேயாமின் தீர்;க்கதரிசன வார்த்தை, வசனம் 17ல் இருந்து தொடங்குகிறது. "அவரைக் காண்பேன், இப்போது அல்ல, அவரை தரிசிப்பேன், சமீபமாய் அல்ல. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும். ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்." மேலும் வசனம் 19ல் கூறுகிறார், "யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகை செய்வார். பட்டணங்களில் மீதியானவர்களை அழிப்பார் என்றான்." டாக்டர். கேய்சர், அதற்கு என்ன அர்த்தம்?

**கெய்சர்:** சரி, அடுத்து தேவ திட்டத்தினுடைய ஆறாவது வாக்குத்தத்தம். இந்த திட்டமானது பல காலங்களாக தொடர்ந்து ஒவ்வொரு படியாக ஒன்றோடொன்று இணைந்து முன்னேறிக்கொண்டிருக்கிறது, இதில் ராஜா என்கிற ஒரு கருத்து எழும்பியிருக்கிறதை நாம் பார்த்து வருகிறோம். இப்போது விநோதமான கதாபாத்திரம் உள்ளே நுழைகிறது. அந்த காரியத்தை

நிருபிக்க முடியாத ஒரு சிக்கல் எழுகிறது. இவர் யூதர் அல்ல. இவர் கோயீம் இணத்தவர், புறஜாதியான். மேலும் இவர் தற்போதைய வடக்கு ஈராக்கிலிருந்து தோன்றியவர், இவர் வந்து இந்த தீர்க்கதரிசனத்தை சொல்கிறார். அவர் சொல்கிறார், “ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்.” சரி, அது ராஜாவைக் குறிப்பதாக இல்லாமலிருக்கலாம்,ஆளுனர். எனவே அதை இன்னும் எளிமையாக்கும்படி, அவர் சொல்லுகிற அடுத்த வரி, ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்.” இருக்கட்டும், இன்னும் எனக்கு விளங்கவில்லை. ஓகே, வசனம் 19, “யாக்கோபிலிருந்து தோன்றும் ஓருவர் ஆளுகை செய்வார்.” அவரும் கூட, இஸ்ரவேலை சபிக்கும்படி அழைக்கப்பட்டவரும் கூட, சொல்கிறார், “என்னால் அப்படி செய்யமுடியாது ஏனெனில் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆனால் ஒன்றை நிச்சயமாய் சொல்வேன், அதற்கு எனக்கு கூலி வேண்டாம் என்றார்.” அவர் சொன்னார், “ஒரு நட்சத்திரம் ஒரு செங்கோல் ஆளுகிற ஒருவர் வருவார்.” இவனை கூலி பேசின மோவாபின் ராஜா மக்களுக்கு விரோதமாய் என்னெ;னவோ செய்து பார்த்தான், அதில் ஒன்றும் பலிக்கவில்லை. மாறாக இவன் அவர்களை ஆசீர்வதித்தான். எனவே தேவனுடைய தெய்வீக திட்டமானது, அவருடைய முப்பரிமாணம் கொண்ட சூத்திரமானது, அவருடைய வார்த்தையை தன்னிடம் கொண்டுள்ளது. “ நான் உங்கள் தேவனாயிருப்பேன். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நான் உங்கள் நடுவில் வந்து வாசம் பண்ணுவேன்.” எனவே 3

விதங்களில் தேவனுடைய திட்டத்தை வகையறுத்திடலாம், முப்பரிமாண சூத்திரம் மூலம்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்ததாக நாம் பார்க்கப்போகும் ஏழாவது தீர்க்கதரிசனம் யயயயயயயயயய ஒகே. தேவன் நமக்கு தகவல்களை கொடுத்திருக்கிறார், ஆனால் அவையனைத்தும் அதிகரித்து நிற்கின்றன. எல்லாபக்கத்திலிருந்து தகவல் கிடைத்துவருகிறது. ஏன்ன நடக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள முயலும் போது இவையனைத்தும் பெருகி நிற்கிறது. இது நம்மை திகைக்க வைக்கிறது, சரியா. அதாவது உபாகமம் 18 15. இங்கு முதலாவதாக மோசே பேசுகிறார், அவர் சொல்கிறார், “உன் தேவனாகிய கர்த்தர்.” ஜனங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார், உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார். அவருக்கு செவிகொடுப்பீர்களாக.”

பிறகு சர்வவல்லமையுள்ள தேவன் ஜனங்களிடத்தில் பேசும் போது சொல்கிறார், “உன்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரர்களிலிருந்து எழும்பப்பண்ணி என் வார்த்தைகளை அவர் வாயிலே அருளுவேன். நான் அவருக்கு கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்.என் நாமத்தினாலே அவர் சொல்லும் வார்த்தைகளுக்கு செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்.” டாக்டர் கெய்சர், இதை விளக்கிடுங்க.

**கெய்சர்:** இது மகத்துவமான ஒன்று தான். தேவன்  தமது வியாக்கியானத்தை கொடுக்கிறார், தமது விளக்கத்தை, அவரது தனித்துவத்தை, மனிதன் மூலம் தருகிறார். இங்கு அது தீர்க்கதரிசியை குறிக்கிறது. ஆனால் அவர் தீர்க்கதரிசி என்பதால் மட்டும் மோசேயோடு பேசவில்லை, ஆனால் மோசேயைப் போல பிரத்தியேகமான ஒரு தீர்க்கதரிசி வருவார், அவர்கள் சகோதரிலிருந்தே அவர் எழும்புவார், எனவே அவர் ஒரு யூதராயிருப்பார். அவர் என்ன செய்யப்போகிறார்? ஆவர் தெய்வீகத்தை பற்றி பேசுவார் பிதாவாகிய தேவன் அவருக்கு அருளிச் செய்த அனைத்தையும் பேசிடுவார். அவருக்கு யாராவது செவிகொடுக்காவிட்டால், தேவனே அவர்களை விசாரித்திடுவாராம். இந்த வார்த்தைகள் இதைத்தான் எடுத்துக்கூறுகிறது.

**ஆன்கர்பெர்க்:** டேரல்?

**பாக:** சரி, நமக்கிருக்கும் திறவுகோல் விஷயம் மோசேயை போல என்பதுதான், அதாவது, அது யோசுவாவைப் போன்ற என்ற எண்ணத்திற்கு நடத்திடும். ஏனெனில் இங்கு நாம் பார்ப்பது தலைவராக இருக்கும் தீர்க்கதரிசி. இன்னும் சில தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள் அவர்கள் பொது வாழ்வில் ஈடுபடாதவர்களாக ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்வில் தேவNனூடு ஐக்கியம் கொள்ள சவால்வீகிறவர்களாக இருப்பார்கள். ஆனால் மோசே மக்களை விடுதலைக்குட்படுத்தினான். எகிப்திலிருந்து வெளியேறுவதற்கு அவன் உத்தரவாதியாக இருந்தான்.

யோசுவாவோ அந்த இலக்கை அடைந்து வாக்குத்தத்த பூமியை வென்றான். ஆனால் யோசுவா மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசி என்பதற்கு பொருந்தவில்லை. எனவே யோசுவாவிற்கு பிறகு யூத மக்கள் அந்த மோசேயை போல ஒரு தீர்க்கதரிசிக்காக எதிர்பார்த்திருந்தனர். இந்த நபர் மக்களை விடுவித்திடுவார், இந்த நபர் மக்களை வழிநடத்திடுவார், இவர் காரியங்களை வெளிபடுத்திடுவார், இந்த நபர் தேவன் உரைத்த அனைத்து வாக்குத்தத்தங்களையும் பெறச் செய்வார் என்று நினைத்தனர். இந்த பகுதியானது தொடக்கமும் முடிவுமாக தீர்க்கதரிசிகளில் பல தனித்துவம் கொண்ட நிலைகள் இருப்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது, மோசே ஒரு விசேஷித்த நிலையில் இருந்த தீர்க்கதரிசி, அவரைப் போல ஒருவர் வருவதற்காக நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இந்த தீர்க்கதரிசிகள் எவ்வளவு விசேஷித்தவர்கள் என்பதைப் பற்றி கொஞ்சம் பேசிடலாம். நான் தொடங்க நினைக்கிறேன், வால்டர், இந்த உபாகமம் 34 9-12: "மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவிக் மேல் தன் கைகளை வைத்தபடியால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான். இஸ்ரவேல் புத்திரர் அவனுக்கு கீழ்ப்படிந்து மோசேக்கு கர்த்தர் கட்டளையிட்டபடியே செய்தார்கள். மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்." இங்கு சில குணாதிசயம் இருக்கிறது, "தேவனை முகமுகமாய் பார்த்தவன், எகிப்து தேசத்திலே பார்வோனுக்கும்

அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும்;;; அவனுடைய தேவன் அனைத்திலும் கர்த்தர் அவனை அனுப்பிச் செய்த சகல அற்புதங்களையும் அடையாளங்களையும், அவன் இஸ்ரவேலர் எல்லாருடைய பிரத்தியட்சமாய் சகல வல்லமையான கிரியைகளையும் மகா பயங்கரமான செய்கைகளையும் செய்தான்." ஆல்ரைட், இப்ப, இங்கையே எல்லாரையும்விட முந்திவிட்டார், இப்படிபடட ஒரு சூப்பர் டூப்பர் வம்சத்தில் வருகிறார் என்று சொல்லுகிறோம் அப்ப அவர், எப்படியிருப்பார்,

**கெய்சர்:** சரி, மற்றொரு குணாதிசயமும் இருக்கிறது. அதாவது, மேசியா, அவர் மனிதனாக மட்டுமல்ல தெய்வீகமானவருமாக வந்திடுவார், ஆனா அவர் ராஜாவாக வருவார் என்பதோடு இப்ப தீர்க்கதரிசியாகவும் இருப்பார் என்கிறோம். ஒரு தீர்க்கதரிசியாக அவர் தேவனுக்கடுத்த செய்திகளை கொடுத்திடுவார். அது மட்டுமில்லாமல், அவர் தெய்வீகமான செயல்களையும் செய்திடுவார். ஏனெனில், மோசேயை போல, அப்படின்னா இயற்கைக்கப்பார்பட்ட, நிலை தானே. ஒருவேளை மோசே சிவந்த சமுத்திரத்திற்கு முன்பாக தெவனுடைய வல்லமையினால் செய்ததையும் வானத்திலிருந்து மன்னாவை வரச் செய்ததையும் பார்த்து வியந்து நின்றால், அவர் நம் மத்தியில் வந்து மூன்று வருடங்கள் வாசம் செய்து அவருடைய கிரியைகளை நடப்பித்து நமக்காக வானத்தை முழுவதுமாய் திறந்திருக்கிறாரே அவரைப் பற்றி நாம் என்ன சொல்லிடுவோம்? எனவே தீர்க்கதரிசியின் வார்த்தை மற்றும் தீர்க்கதரிசியின் கிரியை இவையிரண்டும் அவர்

தெய்வீக தன்மையுடையவர் என்பதை சாட்சியிடுகிறது. இந்த மேசியா தேவனுடைய குமாரனே தான். வேறு யார் இப்படிபட்ட கிரியைகளை நடப்பிக்க முடியும், யாரும் இப்படி செய்ய முடியாது, ஜான்.

**ஆன்கர்பெர்க்:** சிலவற்றை ஒப்பிட்டு பார்க்கலாம். இப்போது இயேசுவை பார்ப்பபோம், ஓகே. அவருடைய கிரியைகளை கண்டவர்கள் அவருடைய கிரியைகளை ஒப்பிட்டு பார்க்க ஆரம்பித்தனர், எப்படி இந்த இயேசு,மோசேக்கும், மேலாயிருக்கிறார்?

**பாக:** வெல், ஆமாம். அதாவது, பொதுவாக, "நீங்க மோசேயை கவனித்தால் இதுவரை அதை நாம் பார்க்கவில்லை." அதை தான் நாம் செய்யப்போகிறேம். இயேசுவை பார்க்கும் போது அவர் எல்லாவிதமான கிரியைகளை செய்யப் பார்க்கிறோம். அவர் பாவத்தை மன்னித்தார், மரித்தவர்களை உயிரோடு எழுப்பினதை பார்க்கலாம். பழைய ஏற்ப்பாட்டில் பார்த்திராத அற்புதங்களை அவர் செய்கிறதை பார்க்கலாம், குருடருக்கு சுகம் கொடுக்கிறார். தண்ணீர் மேல் நடப்பதை பார்க்கலாம். இவையனைத்தும் தெய்வத்துவம் நிறைந்த செயல்கள் என்பதும் அதனால் ஈர்க்கப்படுவதையும் அந்த செயல்களில் அவர் உற்சாகப்படுவதையும் பார்க்கலாம். அவர் தன்னை நேரடியாக அதில் இணைத்துக்கொள்கிறார். அதாவது, இயேசுவின் அற்புதங்களைக் குறித்த சில நூல்கள் இயேசு செய்த அற்புதங்களையும் மற்றவர்கள் சொன்ன அற்புதங்களையும் ஒப்பிட்டு கூறியுள்ளனர். மற்றவர்கள் செய்யும் போது அதற்காக

ஜெபிக்கின்றனர், அல்லது அவர்கள் செய்யும் வேலையை செய்து முடிக்க மருத்துவத்தை உபயோகிக்க முற்படுகிறார்கள். இயேசு அப்படியல்ல. இயேசு நேரடியாக ஈடுபடுகிறார். அவருடைய வார்த்தையே போதுமானது. எனவே நாம் பார்க்கிற காரியம் இயேசு "மோசேக்கும் மேலானவர்". மேலும் அதின் ஒளி பிரதிபளிப்பு தான் யோசுவா - அதாவது, யோசுவா எரிகோவை சுற்றி வந்தார் அதின் மதில்கள் விழுந்தன --- அது நல்லதுதான், ஆனால் இயேசு தன்னை சுற்றியிருந்த சூழலில் செய்த தெய்வீக செயல்பாடுகளோடு ஒப்பிடும் போது அது ஒன்றுமில்லை. அதுவும் சொல்லப்படுகிற செயல்தான் -- உண்மைதான், புதிய ஏற்ப்பாட்டில் அற்புதங்கள் அடையாளங்கள் என்று கூறப்பட்டுள்ளது -- இவையனைத்தும் இயேசு தன்னைக் குறித்து கூறியவற்றை நிஜமென உறுதிசெய்கிறது. விநோதமான விஷயமும் இருக்கிறது புதிய ஏற்ப்பாட்டில் ஒரு கூட்ட மக்கள், பல யூதமத தலைவர்கள், அவர்கள் இயேசுவை சூழ்ந்துகொண்டு அவரிடம், நீர் யார் என்பதை நிருபிக்க வானத்திலிருந்து ஒரு அடையாளத்தை காட்டும் என்றிடுவர்." என்னுடைய மாணவர்களுக்கு இதை போதிக்கும் போது நான் சொல்வேன், "அவங்க என்னதான் கேட்க வர்றாங்க? இயேசு அவர்களுக்கு வலதும் இடதுமாய் பல காரியங்களை நடப்பித்து தேவன் தமது கிரியைகளை அவர்கள் நடுவில் நடப்பிக்கிறார் என்று நிருபிக்க பலவற்றை செய்துகொண்டிருந்தார்."

**ஆன்கர்பெர்க்:** இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறவர்களை கேட்கிறேன், இந்த நிகழ்ச்சியின் மூலம் அவர்களுக்கு என்ன பலன் என்று நினைக்கிறீர்கள்? இதையெல்லாம் எதற்காக சொல்லுகிறோம்?

**பாக:** சரி, அப்போஸ்தலர் 3 இதை மிக தெளிவாக விளக்குகிறது. பேதுரு எழும்பி நின்று மோசேயை போல ஒரு தீர்க்கதரிசி இயேசு தான் என்கிறார். இறுதியில் அவர் சொல்கிறார், "தன்னை யார் என்று அறிக்கை செய்தவராகவே இயேசு இருந்தால்" அவர்கள் சிறிது அழுத்தத்தில் இருப்பதை மறக்கNவுண்டாம் ஏனெனில் தண்டணை நிறைவேற்றப்பட்டது, அவர்கள் இயேசுவுக்கு அளிக்கப்பட்ட கொடுமையில் கையடித்து கொடுத்தவர்கள் இயேசுவை ரோமர்கள் மூலம், சிலுவையிலறைந்தனர், அவரது தலைமையில். அவர் தன்னைக் குறித்து சொன்னது இதுவாக இருந்தால், அவர்கள் இவருக்கு செவிகொடுக்க வேண்டும். அது தீர்க்கதரிசன தலைவர். தீர்க்கதரிசி என்பவன் தேவனுடைய சார்ப்பில் பேசுகிறவாய் இருக்கிறான். பழைய பாரம்பரியத்தை போலவே, தேவன் பேசும்போது நாம் செவிகொடுக்க வேண்டும். எனவே அவர் தன்னைக் குறித்து சொன்னவை அனைத்தும், அவர் எதற்காக வந்தார், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படவும் நாம் ஜீவனுள்ள தேவனோடு திரும்பவும் இணைவதற்காக அவர் நமக்கு கொடுத்திருக்கும் சந்தர்ப்பம், அனைத்தும் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. பேதுரு என்ன சொல்ல வருகிறார் என்றால், நீங்கள் தேவனோடு இணைந்திருக்க விரும்பினால், மோசேயை

போன்ற தீர்க்கதரிசியின் வார்த்தைக்கு செவிகொடுக்க வேண்டுமென்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** மிக அருமையான நேரமாக, இருந்தது. நீங்கள், இவற்றை நன்றாக கவனித்து உங்களுடைய வேதாகமத்தை வைத்து ஆராய்கிறீர்கள் என நம்புகிறேன். ஓகே, ஏன்னா உண்மையான சரக்கு அதில்தான் உள்ளது. நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் நபர் மீது உங்கள் முழு விசுவாசத்தையும் வைத்திட உங்களை நடத்திடும். அவரை நம்பச் செய்யும். அவர் உங்களை பராமரிக்க போதுமானவர், அவர் உங்களை கவனித்திட விரும்புகிறார். சரி, இதை நாம் தொடர்ந்து பார்த்திடலாம். நான் மோசேயையும் இயேசுவையும் ஒப்பிட்டு பேச விரும்புகிறேன், ஆனால் நாம் தாவீதை பற்றி பார்க்கNவுண்டும். அடுத்த வாரம் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2014 A.T.R.I.